(☎ 04175 - 236654 / 235295

# SHANMUGA INDUSTRIES
# ARTS & SCIENCE COLLEGE (Co-Ed)

Certified Under Section 2 (f) & 12 B of UGC Act 1956, An ISO 9001 - 2015 Certified Institution

Permanently Affiliated to Thiruvalluvar University, Vellore and Approved by the Govt. of Tamil nadu & AICTE, New Delhi

Manalurpet Road, Tiruvannamalai - 606 603, shanmugacollege@gmail.com www.shanmugacollege.edu.in

02.11.2022

## சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரியில்

## வளர்ந்த நாடாக உருவாக ஊழலற்ற இந்தியா-2022 - விழிப்புணர்வு நிகழ்ச்சி

சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரியின், நாட்டு நலப்பணித்திட்டம் (NSS), ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இணைந்து **"வளர்ந்த நாடாக உருவாக ஊழலற்ற இந்தியா-2022"** என்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தியது.

இந்நிகழ்ச்சியில் கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் **டி.ஏ.எஸ்.முத்து** தலைமை வகித்தார். பொருளாளர் **எம்.சீனுவாசன்** முன்னிலை வகித்தார். கல்விப்புல முதன்மையர் **பேரா.அழ.உடையப்பன்** வாழ்த்துரை வழங்கினார். முதல்வர் முனைவர் **கே.ஆனந்தராஜ்** அனைவரையும் வரவேற்றார். தமிழ்த்துறைப் பேராசிரியர் **செ.பிரபு** நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை துணைக்கண்காணிப்பாளர் **எஸ்.வேல்முருகன்** அவர்கள் கலந்து கொண்டு மாணவர்களிடம் படிக்கும் காலத்தில் படிக்காமல் இருப்பதும், தனக்குரிய கடமையைச் செய்யாமல் இருப்பதும் ஒருவகை ஊழல் தான், அரசு அதிகாரிகளால் மட்டுமே ஊழலை ஒழிக்க முடியாது அனைவரும் சேர்ந்தால் தான் முடியும், தாய்மொழிப்பற்றும் நாட்டுப்பற்றும் வளர்ந்தால் தான் ஊழலும் லஞ்சமும் தானாகவே ஒழியும். உலகத்தின் உயர்ந்த பண்பாடுகளை உடையது இந்தியா. சிறந்த அறிவாளிகளைக் கொண்டது தமிழகம் எனவும் உரையாற்றினார். ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு தலைமைக் காவலர் **எம்.கோபிநாத்** அவர்கள் ஊழல் பற்றிய கவிதையை வாசித்தார்.

இந்நிகழ்ச்சியின் நிறைவாக நாட்டுநலப்பணித்திட்ட அலுவலர் **டி.அருண்குமார்** நன்றியுரையாற்றினார். துறைத்தலைவர்கள், இருபால் பேராசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள், மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

**செயலர் மற்றும் தாளாளர்**


ஊழல் தடுப்பு
மற்றும்
கண்காணிப்புத்துறை
ஊழல் தடுப்பு